2015 செப்டம்பர் 16]

274—

கூட்டுறவுத் தொழிற்பேட்டை

***21076—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளச்சல் தொகுதியில் கூட்டுறவுத் தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கன்னியாகுமரி மாவட்டத்தில், தொழில் வணிகத் துறையின் கட்டுப்பாட்டில் கன்னியாகுமரி கூட்டுறவுத் தொழிற்பேட்டை ஆரல்வாய்மொழி நகரில் சிறப்போடு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கக்கூடிய குளச்சல் தொகுதியில் தற்போது ஏற்படுத்துகிற எண்ணம் அரசிடம் இல்லை. என்றாலுங்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 10 ஏக்கர் புறம்போக்கு நிலங்களைக் கண்டறிந்து, 25 தொழில் முனைவோர்கள் முன்வருவார்களேயானால், குளச்சல் தொகுதியில் கூட்டுறவுத் தொழிற்பேட்டை அமைப்பது தொடர்பாக அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்கிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில், குளச்சல் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதியிலே நிச்சயமாக 10 ஏக்கர் நிலங்களை எடுப்பதற்கான ஏற்பாடு செய்வதற்கு நான் தயாராக இருக்கின்றேன். ஏனென்றால், எனது குளச்சல் தொகுதிக்குட்பட்ட மக்கள் சிறு தொழில்களை அதிகமாகச் செய்து வருகிறார்கள். குறிப்பாக, மீன் பதனிடுதல், முந்திரிப் பருப்பு தொழிற்சாலை, கயிறு தொழிற்சாலை, செங்கல் தொழிற்சாலை, கல் உடைக்கும் தொழிற்சாலை,*

மண்பாண்டம் செய்வது தொடர்பான தொழிற்சாலை போன்றவற்றில் வேலை செய்து வருகிறார்கள். அங்கே தொழிற்பேட்டை அமைத்தால் நிச்சயமாக, அதிகமாக தொழில் வளர்வதற்கு வாய்ப்பிருக்கிறது. அரசிடமிருந்து மானியம் மூலமாக பெற வேண்டிய நன்மைகளை, வழிகளை அறிந்துகொள்வதற்கு வாய்ப்பிருக்கிறது. நீங்கள் இந்த வருடமே, இப்போதே அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தால் நிச்சயமாக தொழிற்பேட்டை அமைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளை நானும் உடனிருந்து செய்வேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல, எங்கள் தொகுதியிலே புதிய தொழில்களைச் செய்ய தொழில் முனைவோர்கள் முன்வந்தால் மானியம் அளித்து அரசு உதவி செய்ய முன்வருமா எனத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ப. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் தற்போது தொழில் வணிகத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் 11 கூட்டுறவுத் தொழிற்பேட்டைகள், 1,435 தொழில் மனைகள் ஏற்படுத்தப்பட்டு, அவற்றில் 1,397 தொழில் மனைகள் உறுப்பினர்களுக்கெல்லாம் வழங்கப்பட்டு, சிறப்போடு அந்தக் கூட்டுறவுத் தொழிற்பேட்டைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதிலே நம்முடைய கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், குளச்சலுக்குப் பக்கத்திலிருக்கிற, 40 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள ஆரல்வாய்மொழியில் கூட்டுறவுத் தொழிற்பேட்டை 9.16 ஏக்கர் நிலத்தில் சிறப்போடு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம், 1983-ன்படி, ஒரு கூட்டுறவுச் சங்கம் அமைப்பதற்கு குறைந்தபட்சம் 25 நபர்கள் உறுப்பினர்களாக இருந்திட வேண்டும். 25 தொழில் முனைவோர்கள் அதில் உறுப்பினர்களாக இருந்திட வேண்டும். இந்த நிபந்தனைகள் நிறைவேறும்பட்சத்தில், குளச்சல் தொகுதியில் ஒரு கூட்டுறவுத் தொழிற்பேட்டையை அமைப்பதற்கு அரசு ஆயத்தமாக இருக்கிறது. அதேநேரத்தில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், எங்களுடைய மாவட்டத்திலே தொழில்களைக் கொண்டு வர இயலுமா என்றெல்லாம் கேட்டார்கள். கயிறுத் தொழிலைப் பொறுத்தமட்டில், கன்னியாகுமரி மாவட்டம், ஒரு பாரம்பரியமிக்க சிறப்பான இடமாக அமைந்திருக்கிறது. அந்த வகையிலேதான்

2015 செப்டம்பர் 16]

அந்தப் பகுதியிலே 10 கயிறு கூட்டுறவுச் சங்கங்கள் இலாபகரமாக சிறப்போடு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்தத் துறையின் மூலமாக மானியங்களை எல்லாம் பெற்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதுமட்டுமல்ல; மாண்புமிகு அம்மா அவர்கள், கன்னியாகுமரி மாவட்டத்திலே மட்டும் இந்தக் கயிறுத் தொழிலை மிகப் பெரிய அளவிலே நடத்திட வேண்டுமென்பதற்காக அதற்குப் புத்துயிரூட்டக்கூடிய வகையில் SFURTI திட்டத்தின்கீழ் கயிறு குழுமம் (Cluster) ஒன்றை 93 இலட்சம் ரூபாயில் அமைக்க உத்தேசித்து, அதற்கு மத்திய அரசினுடைய அனுமதியையும் பெற்று, விரைவிலே மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசின்மூலமாக கன்னியாகுமரியில் அமைய இருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலே, ஆரல்வாய்மொழி பகுதியிலே கயிறுக் குழுமம் அமைக்கப்பட்டிருக்கிறது. அதே போன்ற குழுமத்தை என்னுடைய தொகுதிக்குட்பட்ட மண்டைக்காடு பகுதியிலே ஆரம்பிக்க முன்வருவீர்களா என நான் அறிய விரும்புகிறேன். தொழில் ஆய்வு மையம், தொழிற்பயிற்சிக் கூடம், ஆராய்ச்சி மையம் போன்றவற்றை எங்களுடைய கன்னியாகுமரி மாவட்டத்திலே புதிதாக ஆரம்பிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-20

மாண்புமிகு திரு. ப. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆராய்ச்சி மையங்களெல்லாம் ஏற்படுத்துகிற எண்ணம் அரசிடத்தில் இப்பொழுதும் இல்லை, எப்பொழுதும் இருக்காது என்று நான் கருதுகிறேன். ஏனென்று கேட்டால், தேவையான கயிறுக் குழுமங்கள் அங்கே துவங்கப்பட்டிருக்கின்றன.

வருங்காலங்களில் தேவை ஏற்படின், ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை ஆலோசிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள்.*

திரு. டி. செங்குட்டுவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி நகரம் என்பது கிருஷ்ணகிரி மாவட்டத்தினுடைய தலைநகரமாக இருக்கின்றது. அதைச் சுற்றி எந்த பெரிய தொழில் வளாகங்களும் இல்லாத காரணத்தினால், கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே கிருஷ்ணகிரி முதல் ஓசூர் வரை 6 வழிச் சாலையிலே, போளுப்பள்ளி என்ற இடத்திலே சிப்காட்டின் சார்பிலே 90 ஏக்கரில் ஒரு தொழிற்பேட்டை ஆரம்பிக்கப்பட்டு, அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டுவிட்டன. இன்றளவும் அவை பயனாளிகளுக்குக் கொடுக்கப்படாமல், தொழில் முதலீட்டாளர்களை வரவழைத்து தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்படாமல் அப்படியே நிற்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே ஏற்கெனவே 2, 3 முறை நான் கேட்டிருக்கிறேன். ஆகவே, எப்போது அந்தத் தொழிற்பேட்டை இயங்கத் தொடங்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ப. மோகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி தொழில் மற்றும் வணிகத் துறையைப் பற்றியதாகும். என்றாலும்கூட, நம்முடைய காங்கிரஸ் உறுப்பினர் அவர்கள் கேட்டது தொழில் சார்ந்த வேறொரு கேள்வி. ஆனால், இவர் சிப்காட் குறித்து கேட்கிறார். என்றாலும்கூட, நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னால், 25 இடங்களில் சிட்கோ மூலமாக தொழிற்பேட்டைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் இந்த அவைக்குப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஆண்டு, மாண்புமிகு அம்மா அவர்கள் 4 தொழிற்பேட்டைகளைத் துவக்கினார்கள். இந்த 4 ஆண்டுகளிலே மாத்திரம்*

2015 செப்டம்பர் 16]

29 தொழிற்பேட்டைகளை அமைத்தது மாண்புமிகு அம்மாவின் அரசு என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் 14 மாத்திரம்தான் தொடங்கப்பட்டன. அதுவும் சில இடங்களில் இடங்கள் சரியாக தேர்வு செய்யப்படாத சில சூழ்நிலைகள் இருந்த காரணத்தால், சில இடங்களிலே இடம் எடுக்கப்படாமல், தொழிற்பேட்டைகளை முழுமையாக அமைக்க முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே, எங்கெல்லாம் இடங்கள் கிடைக்காமல் இருக்கிறதோ, அங்கெல்லாம் இடங்களைத் தேர்வு செய்கிற நல்ல பணியிலே அம்மாவின் அரசு ஈடுபட்டிருக்கிறது என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 275, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா, மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

275—

மறுவாழ்வு மையம்

***56280— திரு. மு.வீ. கருப்பையா:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோழவந்தான் தொகுதி, சோழவந்தானில் மன வளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கு மறுவாழ்வு மையம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் மன வளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கு தொழிற்பயிற்சியுடன்கூடிய மறுவாழ்வு மையம் அமைக்கப்பட வேண்டும் என்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி மதுரை மாவட்டம், திருமோகூர் என்ற இடத்தில் ஆண், பெண் இருபாலருக்கும், மதுரை மாவட்டம், புதூர் என்ற இடத்தில் பெண்களுக்காக மட்டும் தொழிற்பயிற்சி மற்றும் தங்கும்